சுருக்கம்

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம்–III – சேலம் மாநகராட்சிக்கு ரூ.168.00 கோடி மதிப்பீட்டில் தனியான (Dedicated) குடிநீர் திட்டத்தினை செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.2) துறை.

அரசாணை (நிலை) எண்.127 — நாள்: 11.9.2007

படிக்க:

நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ஆர்.ஓ.சி. எண்.40007/06/W.B.3/2006, நாள் 6.9.2007.

---

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் சேலம் மாநகராட்சிக்கு ரூ.168.00 கோடி மதிப்பீட்டில் தனியான (Dedicated) குடிநீர் திட்டத்தினை செயல்படுத்த நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் ஒரு கருத்துரு அனுப்பியுள்ளார். அதில் அவர் தற்பொழுது 188.44 MLD குடிநீர் தேவைப்படுகிறது என்றும் தற்போது கீழ்க்காணும் இரண்டு திட்டங்களின் கீழ் மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தரப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்:–

| | | | | |
|---|---|---|---|---|
| 1. மேட்டூர் | – | சேலம் குடிநீர் திட்டம் | – | 12 MLD |
| 2. சேலம் | – | ஆத்தூர் கூட்டு குடிநீர் திட்டம். | – | 60 MLD |
| | | மொத்தம் | – | 72 MLD |

2. சேலம் மாநகராட்சி கேட்டுக்கொண்டதற்கிணங்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலம் கலந்தாலோசகராக திருவாளர்கள் தமிழ்நாடு குடிநீர் முதலீட்டுக் கழக நிறுவனத்தை நியமனம் செய்து ரூ.168.00 கோடிக்கு விரிவாக திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அரசாணை (நிலை) எண்.114, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 2.8.2005ல் வெளியிடப்பட்ட அரசாணையின்படி தொழில்நுட்ப குழுவால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. சேலம் மாநகராட்சியின் ரூ.168.00 கோடி மதிப்பீட்டினை தனியான குடிநீர் திட்டத்தினை செயல்படுத்தவும் மற்றும் ஆண்டு பராமரிப்பு செலவினம் ரூ.16.62 கோடி

எனவும் நகராட்சி நிர்வாக ஆணையர் தனது கருத்துருவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:—

| வ.எண் | நிதி ஆதாரம் | | தொகை |
|---|---|---|---|
| 1. | குடிநீர் இணைப்புகளின் வைப்பு தொகை மற்றும் குடிநீர் வரி மூலம் சேலம் மாநகராட்சியின் பங்களிப்பு. | : | ரூ.35.00 கோடி |
| 2. | உள்கட்டமைப்பு நிதி மற்றும் கேளிக்கை நிதி ஆகியவற்றிற்கு இரண்டு ஆண்டுக்கான மானியம். | : | ரூ.25.00 கோடி |
| 3. | பழைய குடிநீர் திட்டத்தை ஒப்பளிப்பு செய்வதன் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பங்களிப்பு. | : | ரூ.5.00 கோடி |
| 4. | தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்—III—ன் மானிய நிதி—I—ன் மான்யம். | : | ரூ.25.00 கோடி |
| 5. | ஒருங்கிணைந்த வீடு மற்றும் குடிசை மேம்பாட்டு திட்டம் மூலம் நகர்ப்புற குடிசைப் பகுதிகளுக்கு குடிநீர் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகை.: | : | ரூ.20.00 கோடி |
| 6. | தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம்—III—ல் பெறப்படும் தொகை. | : | ரூ.58.00 கோடி |
| | மொத்தம் | | ரூ.168.00 கோடி |

மேலும் இத்திட்டத்தினை செயல்படுத்த தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்ட (TNUDP) மானிய நிதியான ரூ.10.00 கோடி அளவினமாக இருந்தும் கூடுதலாக தேவைக்கேற்ப ரூ.15.00 கோடியை மானியமாக வழங்க நடைமுறையிலுள்ள மானிய விதிமுறைகளை சிறப்பினமாக தளர்த்தி வழங்க கோரியுள்ளார். மேலும் மாநில நிதி ஆணையத்தின் கீழ் வழங்கப்படும் உள்கட்டமைப்பு நிதியிலிருந்து ரூ.25.00 கோடி மானியமாக பெற தனிக்கருத்துரு அனுப்பப்படும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் மைய அரசின் ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து குடிசைப்பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு நிதியுதவி பெற தனிக்கருத்துரு சேலம் மாநகராட்சியால் தயாரித்து அனுப்பப்படும் என்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தற்சமயம் செயல்பட்டுக் கொண்டிருக்கும் சேலம் – ஆத்தூர் கூட்டு குடிநீர் திட்டத்தினை மீள ஒப்படைப்பதால் அதற்கான ஈட்டுத் தொகையான ரூ.5.00 கோடியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சேலம் மாநகராட்சிக்கு வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

4. மேற்கண்ட சூழ்நிலையில் சேலம் மாநகராட்சிக்கு தனியான குடிநீர்த் திட்டத்தினை ரூ.168.00 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம்—III (TNUDP-III) திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (TNUIFSL) மூலமாக பெற்று செயல்படுத்தி நிர்வாக அனுமதி வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

5. நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ள நிதி ஆதாரங்கள் தொடர்பாக அந்தந்த நிதி நிறுவனங்களின் மூலம் நிதியுதவி பெற தனித்தனியாக பரிசீலித்து நகராட்சி நிர்வாக ஆணையர் முடிவு எடுத்துக் கொள்ளலாம் எனவும், சேலம் மாநகராட்சிக்கு தனியாக குடிநீர்த் திட்டத்தினை ரூ.168.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

6. இந்த ஆணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.2806/FS/P/07,நாள் 7.9.2007–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை.5.
மேலாண்மை இயக்குநர், குடிநீர் வடிகால் வாரியம், சென்னை–5.
மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம், சென்னை–17.
ஆணையர், சேலம் மாநகராட்சி, சேலம்.
மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம்.
மாநில கணக்காய்வாளர், சென்னை–18.
மாநில கணக்காய்வாளர், சென்னை–18. (பெ.உ)
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை–9.
நகல்:முதுநிலை நேர்முக உதவியாளர், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
முதுநிலை நேர்முக உதவியாளர், மாண்புமிகு ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
முதுநிலை நேர்முக உதவியாளர், மாண்புமிகு நிதியமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ.1 / மா.ந.2 / வ.செ) துறை, சென்னை–9.

–/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/–

பிரிவு அலுவலர்